1994 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புவனகிரி ஒன்றியம், மஞ்சக்கொல்லை, ஆதிதிராவிட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 1992-ஆம் ஆண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11–05

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சக்கொல்லை ஆதிதிராவிட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மின் திட்டம் அளித்து 1992-ஆம் ஆண்டில் செயல்பட்டது. ஆனால், நான் இந்த வினா போட்ட நேரத்தில் அது இயங்கவில்லை. பின்னர், அதிகாரிகளிடத்திலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதைத் தெரிவித்ததில், தற்போது இது பழுது பார்க்கப்பட்டுள்ளது. மக்களுக்கு அரசின் திட்டங்கள் சரிவரச் செயல்படவும், ஆங்காங்கே மேல்நிலைத் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்து மின் இணைப்புப் பணிகள் சரியாக இயங்கவும் அரசு அறிவுரை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகட்டும், மின் இணைப்புகள் ஆகட்டும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே, முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இதற்கு என்று பிரத்தியேகமாக தனி அறிவுரை தேவை இல்லை என்று கருதுகிறேன். அப்படி ஏதாவது ஒரு திட்டத்திலே பணிகள் சுணக்கம் அடைந்திருக்கும் என்று கருதினால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

421--

பேராவூரணி ஒன்றியம், மடத்திக்காட்டில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்

*21158--**திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மடத்திக்காட்டில் கூட்டுறவு அங்காடி தனியாக அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

இல்லை.

437–

ஆதனக்கோட்டை தொடக்க விவசாயக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்தல்

*16729–திரு.சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், ஆதனக்கோட்டை தொடக்க விவசாயக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு.கா. பு. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]